2 5 OCT 2005
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## FIRST YEAR FIRST SEMESTER EXAMINATION IN BBA/BCOM

## 2003/2004 (DECEMBER 2004)

## MGT 1013 – PRINCIPLES OF MANAGEMENT

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

## Q1. Pedaling Your Way to Fame

மூன்று கிழமையான மிகக் கடுமையான பயிற்ச்சி அல்லது முயற்சியின் விளைவாக துணிவு, சகிப்புத் தன்மை, தூண்டுதல் என்பன ஏற்படுகின்றன. இது Tour de France இல் பங்குபற்றுபவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற அணுகுமுறையாகக் காணப்படுகின்றது அல்லது அவர்கள் எவ்வாறு செயற்படுகின்றார்கள் என்பதனைக் குறிக்கின்றது. Tour de France என்பது உலகின் மிகப் பெரிய bicycle race ஆகும். இவ் bicycle race இல் பங்குபற்றும் ஒவ்வொருவரும் தைரியமாகவும் குறித்தளவு துணிவுடனும், சகிப்புத் தன்மையுடனும் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இவ் ஓட்டத்தில் பங்குபற்றும் bicycle சவாரி செய்பவர்கள் குழுக்களாகக் காணப்படுகின்றனர். இக் குழுக்கள் வர்த்தகக் கம்பனிகளினால் அனுசரணை செய்யப்படுகின்றனர். இக் குழுக்கள் அவர்களது Star போட்டியில் வெற்றிபெற உதவி புரிகின்றனர். வழமையாக ஒன்று அல்லது இரண்டு அங்கத்தவர்களை கொண்ட குழு போட்டியில் வெற்றியடைய இயலுமானதாகக் காணப்படுகின்றது. ஏனைய சவாரி செய்பவர்கள் (riders) அவர்கட்கு உதவி புரிபவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் குழுத் தலைவரினை உற்சாகப்படுத்துவதோடு ஏனையவர்களை இலக்கினை நோக்கிச் செல்லத் தூண்டுகின்றனர். ஆச்சரியமற்ற விடயம் என்னவெனில் Tour இன் வெற்றியாளருக்கு $ 400,000 பரிசாக அவரின் குழுவில் உள்ளவர்கட்கு கொடுப்பதற்காக வழங்கப்படுகின்றது. இருப்பினும் வெற்றியாளர் வெறும்கையுடன் வீடு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. கூட்டு அனுசரணையாளர்களினால் வெற்றிபெற்ற வீரருக்கு Million dollar சம்பளமாக வழங்கப்படுவதுடன், அவ் விளையாட்டு வீரர் வர்த்தக ரீதியாகவும் வருமான மீட்டக் கூடியதாக உள்ளது. எக்காரணிகளினால் Tour de France உலகின் தலைசிறந்த விளையாட்டு மையமாகக் கொள்ளப்படுவதுடன், தூண்டுதலும், சகிப்புத் தன்மையும் அங்கு முக்கியமாவது ஏன்? முதலாவது காரணி வேகம் துவிச்சக்கர வண்டியில் காணப்படும் இரண்டு மெல்லிய சக்கரங்களும் மணிக்கு 60 மைல்கள் தூரத்தினை அடைய துணை புரிகின்றது. ஒரு போட்டியாளரின் கருத்து என்னவெனில் மிக வேகமாகச் செல்வதிலேயே உத்வேகம் (Thrill) தங்கியுள்ளது. ஆனாலும் இதனால் அபாயகரமான ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றது.

இவ் ஆபத்தானது "Living on the edge" போன்ற ஓர் உணர்வினை ஏற்படுத்தும் போட்டியின் போது மூன்று கிழமைகட்கு Tour de France இன் பங்குபற்றாளர்கள் தமது பயணத்தினை மேற்கொள்கின்றனர்.

இவர்கள் நகரங்களினூடாகவும், கிராமங்களினூடாகவும் பயணிக்கின்றனர். போட்டி முடிவடையும் இறுதி இடமான Paris இனை அடைவதற்காக ஒரு நாளைக்கு 150 வரை (6 hrs in a day) பயணித்து போட்டியின் மொத்த தூரமான 2500 மைல்களை அடைவர்.

இப் போட்டியானது மிகப் பாரிய அளவில் மன ஒழுக்கத்தினையும், விளையாட்டுத் திறனையும், அனுபவத்தினையும் கொண்டது. அத்துடன் தம்மைப்பற்றி தாமே அறிந்து கொள்ளல் என்பது இங்கு முக்கியமாகக் கருதப்படுகின்றது. ஒரு வெற்றிகரமன போட்டியாளன் தனது உடல் நிலை, மன நிலை, தன்னால் என்ன செய்ய முடியும், என்ன செய்ய முடியாது என்பவற்றினை அறிந்திருப்பவராகக் காணப்படுவர்.

**வினாக்கள்**

1. (அ) இச்சந்தர்ப்பத்தில், தனிநபர்களின் செயற்பாட்டினை அதிகரிப்பதில் / தூண்டுவதில் குழுவின் பங்களிப்பு என்ன? முகாமை செய்வதற்கு இதில் எவ்வகையான தாக்கங்களைக் காணுகின்றீர்?

(ஆ) Tour de France இல் காணப்படும் தனிநபர்கட்கான தூண்டுதலை விளக்க எதிர்பார்க்கை கோட்பாட்டினை (Expectancy Theory) பிரயோகிக்குக?

(இ) Tour de France இன் பங்குபற்றாளர்கள் Maslow வின் படிமுறைக் கோட்பாட்டில் எந்நிலையில் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். ஆராய்க.

2. (அ) "முகாமைத்துவச் செயற்பாட்டினை முறையாக எடுத்துச் செல்வது முகாமையாளர்களின் பல திறன்களில் தங்கியுள்ளது.". அத் திறன்களை விபரிக்குக. **(05 புள்ளிகள்)**

(ஆ) திட்டமிடல் செய்முறையினை (Planning Process) விளக்கி வினைத்திறனான திட்டமிடலின் நன்மைகளை வரிசைப்படுத்துக. **(08 புள்ளிகள்)**

(இ) பின்வரும் பதங்களை வரைவிலக்கணப்படுத்தி, வேறுபடுத்துக "Job rotation", "Job enlargement" "Job Enrichment". **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 19 புள்ளிகள்)**

3. (அ) நிறுவனச் சூழலினை வரையறுக்குக. அத்துடன் task சூழல் பரிமாணங்களையும் பொதுச் சூழல் பரிமாணங்களையும் (General Environment) ஐயும் பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (09 புள்ளிகள்)

LIBRARY
25 OCT 2005
University, Sri Lanka

(ஆ) ஒரு புதிய பொருளினை சந்தைக்கு அறிமுகப்படுத்த திட்டமிட்டுக் கொண்டிருக்கும் நிறுவனத்திற்கு அதன் அகச் சூழல் காரணிகளின் தாக்கத்தினைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 19 புள்ளிகள்)

4. "கட்டுப்பாடானது நிறுவனம் சரியான திசையில் செல்ல உதவி செய்கிறது" Griffin.

(அ) 'கட்டுப்பாடு' என்னும் பதத்தினால் கருதப்படுவது யாது? அத்துடன் கட்டுப்பாட்டின் நோக்கங்களை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(ஆ) "கட்டுப்பாட்டுச் செயன்முறையானது பல்வேறு படிமுறைகளைக் கொண்டது" அப் படிமுறைகளை சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

(இ) வினைத்திறனான கட்டுப்பாட்டின் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 19 புள்ளிகள்)

5. ஏனையவர்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துவதே தலைமைத்துவம் (Leadership) ஆகும். Griffin.

(அ) முகாமை செய்வதில் (Management) தலைமைத்துவத்தின் (Leadership) முக்கியத்துவம் யாது? (05 புள்ளிகள்)

(ஆ) முகாமைத்துவத்தில் இருந்து எவ்வாறு தலைமைத்துவம் வேறுபடுகிறது?

(06 புள்ளிகள்)

(இ) Michican கற்கையின் இரு அடிப்படையான தலைமைத்துவங்களை அடையாளம் கண்டு விளக்குக. அத்துடன் அவற்றில் எது சேவை நிறுவனங்கட்கு வினைத்திறனானது என்பதையும் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 19 புள்ளிகள்)